அச்சம் இல்லை அச்சமில்லை அச்சம் என்பது இல்லையே 2
ஆண்மை கொண்ட ஈழப்போரில் அச்சம் என்பதில்லையே

இலங்கையினை ஆழ்வோரிடம் இரக்கம்மென்பது இல்லையே
இந்தியாவை ஆழ்வோர்க்கும் இரக்கம் என்பது இல்லையே
ஆரக்கி மகள் சந்திரிகா ஆழும் நாட்டில் தொல்லையே
ஆவள் நடத்தும் படுகொலைபோல் எல்லை என்பது இல்லையே

அச்சம் இல்லை அச்சமில்லை அச்சம் என்பது இல்லையே 2
ஆண்மை கொண்ட ஈழப்போரில் அச்சம் என்பதில்லையே

சேரசோழ பாண்டிமன்னர் உலவிவந்த நாட்டிலே
சேது மன்னர் உறவு கொண்ட மறவர் வாழும் தீவிலே 2
சூழ்சி மகள் சந்திரிகா சிலந்தி போன்று ஆடுறாள்
சூரர் என்றும் வீரர் என்றும் தமிழர் இங்கு பேசுறார் 2

அச்சம் இல்லை அச்சமில்லை அச்சம் என்பது இல்லையே 2
ஆண்மை கொண்ட ஈழப்போரில் அச்சம் என்பதில்லையே

ஆமை கூட தமிழகத்தில் ஆணையினை வென்றதே
ஆண்மை உள்ள தமிழினமே அஞ்சவேண்டாம் எழுகவே
ஊர்ந்து செல்லும் எறும்பு கூட புற்றில் ஆட்சி நடத்துது
உலகோரே அறிவீரே நாட்டை மீட்கும் போரிது 2

அச்சம் இல்லை அச்சமில்லை அச்சம் என்பது இல்லையே 2
ஆண்மை கொண்ட ஈழப்போரில் அச்சம் என்பதில்லையே